# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு 2030 கார்த்திகை 16 வியாழக்கிழமை (02-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் :5


## வடக்கு-கிழக்கில் உணர்வு பூர்வமாக நேற்று கறுப்புப்பட்டிப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 2

மடுத்தேவாலயம்மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டிக்கும் வகையிலும் அங்கு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் நேற்று வடக்கு-கிழக்குப் பாடசாலைகளில் கறுப்புப் பட்டி அணியும் போராட்டம் உணர்வு பூர்வமாக நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப்போராட்டத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்து தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்றையதினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் சந்திரிகாவின் முகவர்களாக ஈ.பி.டி.பி?

கொழும்பு, டிசெ. 2

யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் முகவர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி ) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று ''தமிழ் நெற்'' செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

குடாநாட்டில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவின் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன என்றும்—

இந்தச் சுவரொட்டிகளை ஈ. பி. டி. பி. தொண்டர்கள் ஒட்டிவருகின்றனர்என யாழ். வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும்—

அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேசமயம்—

விடுதலைப் புலிகளின் தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இயல்புநிலை, இடைக்கால நிர்வாகம் இவைகுறித்து புலிகளுடன் பேசலாம்

## ரணில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 2

**இயல்பு நிலை ஏற்படுத்துதல் மற்றும் இடைக்கால நிர்வாகம் ஆகிய இரண்டு குறித்தும் விடுதலைப் புலிகளுடன் அரசு முதலில் பேச்சு நடத்தலாம்.**

**— இப்படித் தெரிவித்திருக்கின்றார் எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க.**

நேற்று கொழும்பில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

புலிகளுடன் தாம் நடத்திய இரகசியப் பேச்சுகள் குறித்து பகிரங்க அறிக்கை ஒன்றை ஜனாதிபதி வெளியிட வேண்டும்.

இந்தப் பேச்சுகள் மூலம் என்னுடன் அவர் செய்து கொண்ட லியம்பொக்ஸ் உடன்படிக்கையிலிருந்து அவர் மீறி விட்டார்.

என்றாலும் புலிகளுடன் இரகசியப் பேச்சு நடத்த முற்பட்டதன் மூலம், புலிகளுடன் பேசி சமாதானத் தீர்வு காண்பதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை அவர் ஒப்புக்கொண்டு விட்டார்.

ஆனால் வெளியில் வேறு மாதிரி — புலிகளை அடக்கி ஒடுக்கி, அழித்து இராணுவத் தீர்வு காணப்போகிறவர் போன்று — பேசித் திரிகின்றார். ஏதோ ஐ. தே.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இரகசியமாகப் பேச முயலவேயில்லை என்கிறது அரசு

கொழும்பு, டிசெ. 2

விடுதலைப் புலிகளுடன் எந்த வகையான இரகசியப் பேச்சுக்களையும் நடத்த அரசாங்கம் ஒருபோதும் முயற்சித்ததில்லை என அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் கடந்த சனியன்று நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் உரையாற்றிய புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சு நடத்த விரும்பினார் எனத் தெரிவித்திருந்ததை அடுத்தே இந்த அறிவிப்பை அரசு விடுத்துள்ளது.

உலக நாடுகள் சில அரசாங்கத்தின் பெயரில் பேச்சுவார்த்தை நடத்த புலிகள் இயக்கத்தை அணுகின என்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும் எனவும் —

ஆனால் விடுதலைப் புலிகளுடன் எந்த வகையான அணுகுமுறைகளையும் மேற்கொள்ளுமாறு ஒருபோதும் அரசாங்கம் அந்த நாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத் தமிழர்களை கைதுசெய்வதை நிறுத்துக

### ஆறுமுகம் தொண்டமான் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 2

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மலையகத் தமிழர் கைது செய்யப்படுவதை உடன் நிறுத்த ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

கடந்த வாரங்களில் மலையகத்தைச் சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

மலையகத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகளில் படையினர் தேடுதல்கள் நடத்தியுள்ளனர் என்றும் —

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய செயற்பாடுகளை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (உ.3)

## மீன்பிடிக்க கட்டுப்பாடு

மன்னார், டிசெ. 2

மன்னார் மாவட்டத்தில் மீன் பிடிப்பதற்கு நேற்று முதல் புதிய கட்டுப்பாடுகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

வார நாள்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மட்டுமே மீன் பிடிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இரவு பகலாக— எதுவித கட்டுப்பாடுமின்றி— மன்னார் மீனவர்கள் மீன் பிடித் தொழிலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3—150)

குடாநாட்டில்:

## வாக்காளர். அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 2

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி குடாநாட்டில் நேற்று ஆரம்பமாகியது.

குடாநாட்டிலுள்ள 11 தேர்தல் தொகுதிகளையும் சேர்ந்த 5 இலட்சத்து 63 ஆயிரத்து 490 பேருக்குமான வாக்காளர் அட்டைகளை யாழ். தேர்தல் திணைக்களம் நேற்று முன்தினம் யாழ். பிரதம தபாலகத்துக்கு அனுப்பியிருந்தது.

ஊர்காவற்றுறை மற்றும் வட்டுக்கோட்டை, காங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் குறித்து இதுவரை 277 முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ. 2

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 20 நாள்கள் இருக்கும் நேரத்தில் இதுவரை 277 வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. தே. க. சார்பில் 133 முறைப்பாடுகளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் 110 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் சார்பில் பெரிதாக முறைப்பாடுகள் எதுவுமில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

அதே நேரம் — வன்முறை

[10 ஆம் பக்கம் பார்க்க]

12 நாள்களின் பின்னர்

## மன்னார் தீவிலிருந்து போக்குவரத்து ஆரம்பம்

மன்னார், டிசெ. 2

மன்னார் தீவுக்கும் வெளியிடங்களுக்கும் இடையே கடந்த 12 நாள்களாகத் தடைப்பட்டிருந்த போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பமானது.

கடந்த 18 ஆம் திகதி முதல் தடைப்பட்டிருந்த — வவுனியா, கற்பிட்டி, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கான பஸ் சேவைகள் நேற்றுக் காலை 10 மணிக்கு மன்னாரிலிருந்து ஆரம்பமாகின.

ஆனாலும் குறைந்த எண்ணிக்கையான பொதுமக்களே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 38 தமிழர்கள் செவ்வாயன்று வெள்ளவத்தையில் கைது!

கொழும்பு, டிசெ. 2

வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேடுதல்களின் போது 38 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் அந்தப் பிரதேசத்தில் உள்ள கடைகள் வீடுகள் ஆகியவற்றில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும்—

அச்சமயம் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் —

அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்றும்—

பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ,3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 2

வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளையின் சேவை நலன் பாராட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மருதனார் மடத்திலுள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் ச, வீரசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேற்படி கல்வி வலயத்தில் கடமையாற்றி மேற்படிப்புக்காகச் சேவையில் இருந்து விலகிய எஸ். சபிதா, வ. ஸ்ரீரஜனி, இடமாற்றம் பெற்றுச்சென்ற ச. முருகாம்பிகை, ஜெ. வாசுகி, எஸ். தியோஜினஸ் ஆகியோரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(உ-7)

## இணுவிலில் திருட்டு

கோப்பாய், டிசெ. 2

இணுவில் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் ரூபா 50 ஆயிரம் பணம் திருடப்பட்டுள்ளது.

வீட்டின் கூரை ஊடாக உள்ளிறங்கிய திருடர்கள் அலுவலகப் பையில் இருந்த பணத்தை பையுடனே திருடிச் சென்று அருகில் உள்ள நூல் நிலையத்தில் வெற்றுப்பையை போட்டுவிட்டுச் சென்றுள்ளனர். அதேவேளை கடந்த வாரம் இணுவில் மேற்கில் சோமஸ்கந்தக் குருக்களின் வீட்டில் பெறுமதிமிக்க டெக் மற்றும் மின்சார உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

(இ-72)

## கல்விக் கண்காட்சி

காரைநகர், டிசெ. 2

காரைநகர்ப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பக் கல்விக் கண்காட்சி கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்வி அதிகாரி ந. பரமசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில்தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆரம்பக் கல்வி யெற்பதிட்ட இணைப்பாளர் ப. சச்சிதானந்தம், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் செ. செல்வரட்ணம், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆ பலராமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(உ-83)

## கூரைத் தகடுகள் விநியோகம்

காரைநகர், டிசெ. 2

வன்செயல் காரணமாக வீடுகளை இழந்த ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பயனாளிக்கு பத்து கூரைத்தகடுகள் வீதம் இன்று ஊர்காவற்றுறை ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட உள்ளன.

(உ-73)

## காங்கேசன்துறை முகாமில் 8 பெண்கள் உட்பட 24 பேர்!

யாழ்ப்பாணம், டிசெ. 2

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் 8 பெண்கள் உட்பட 24 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று அந்த முகாமிற்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை நேரில் சந்தித்து உரையாடிய அவர் அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட குமாரவேல் லக்ஷ்மி (வயது 36 - சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம்.) 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (வயது 52- நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரும் தற்பொழுது காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-5 9)

## ஒன்றுகூடல் வைபவம்

யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் சேவை புரியும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் ஒன்றுகூடல் வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். வலயக் கல்வித்திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் இ. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்புரைகள், கலைநிகழ்வுகள், இணைந்த சேவையில் பதவிஉயர்வுபெற்றவர்களைக் கௌரவித்தல் ஆகியன இடம்பெறும். (உ-51)


லிபேட்டி அச்சுவேலி.
முரளி - ரோஜா
நடித்த
★ ஊட்டி
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
அடுத்த வெளியீடு
மனம் விரும்புதே உன்னை
(71295)



ராஜா
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
அர்ஜுன் - மீனா, ரம்பா
மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை
10-30, 2-30,
நாளை முதல்
மகாபிரபு
(சி/10030)



நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று மட்டும்
அர்ஜுன் - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
காட்சிகள்:
11-00, 2-30,
(புதிய நேரம்)
3ஆம் திகதி முதல்
உழைப்பாளி
(71445)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் நிதியத்தினதும் செயலாளர்

திரு. மார்க்கண்டு இராமதாசனின் (யூரோவில்)

மாமியார்

### திருமதி அன்னபூரணம் கனகசபை

அவர்கள் இறைபதமடைந்ததால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/திருநெல்வேலி இ. த. க. பாடசாலை.

(71411)

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் சுப்பையா

மறவன்புலவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சுப்பையா 01-12-99 அன்று காலமானார்.

இவர் அம்பலவாணர் - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், சின்னம்மாவின் அன்புக்கணவரும் மகேஸ்வரி (கனடா), மகேந்திரன், மாணிக்கவாசகர், மனோரஞ்சிதம், சிவபுண்ணியநாதன் (கனடா), மகேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), லதா (கனடா), வசந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும். வேலாயுதபிள்ளை (கனடா), கமலாதேவி, பரமேஸ்வரி. இராசரட்ணம், மாலா (கனடா), மலர் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), சிவம் (கனடா), மாலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02-12-99 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

[71451]

### மயில்வாகனம் பொன்னம்பலம்
(சிங்கப்பூர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தையிட்டிப் புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னம்பலம் (சிங்கப்பூர்) அவர்கள் 01-12-99 நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் மல்லாகம் மயில்வாகனம் — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், தையிட்டிப்புலம் ஏகாம்பரம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புத் தந்தையும் திரு. ம. சுப்பிரமணியம், திரு. ம. வல்லிபுரம், திரு. ம. முத்துத்தம்பி திருமதி ஆ. இராசம்மா. திருமதி செ. பொன்னம்மா, திருமதி சி. தனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சு. றோஸ்மணி, திருமதி வ. தங்கப்பிள்ளை, திருமதி மு. ஜெயமலர், திரு. இ. ஆறுமுகசாமி, திரு. கு. செல்லத்துரை, திரு க. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மல்லாகத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
திரு. ஆ. இராஜசிங்கம்
(மருமகன்)

பங்களா ஒழுங்கை,
மல்லாகம்.

(71459)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், டிசெ. 2

திருநெல்வேலி புனித பிரான்ஸிஸ்து சவேரியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இன்று காலை முதல்நன்மை வழங்கப்படும். மாலையில் நற்கருணை நாதர் விழா இடம்பெறும்.

நாளை காலை 7.15 மணிக்கு புனிதரின் திருநாள் பலிப்பூசை நடைபெறும்,

அருட்திரு மைக்கல் சுவாமி பலிப்பூசையை நடத்துவார்.

(உ-3)

★ ★ ★

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பரவிநாயகர் கோயிலில் வருடந்தோறும் மழை வேண்டிச் செய்யும் குளிர்த்தி, விசேட அபிஷேகம், பூசை ஆகியன நாளை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். (உ-30)

★ ★ ★

உடுவில் ஸ்ரீ சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தான மண்டலாபிஷேக காலச் சொற்பொழிவுத் தொடரில் சிவத்திரு வ. குமாரசாமி ஐயாவின் 'மகாபாரதம்' பற்றிய தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது. இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் ஒக்ரோபர் 24 ஆம் திகதி இடம்பெற்று 48 தினங்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. (உ-152)

★ ★ ★

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளின் 56 ஆவது குருபூசை நிகழ்வுகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அல்வாய் வடக்கு வியாபாரிமூலையில் உள்ள அவரது சமாதிக் கோவிலில் நடைபெறவுள்ளது. (உ-7)

★ ★ ★

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாகியது. பத்துத்தினங்கள் தொடர்ந்து உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி [illegible] வுறும். [இ-109]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
09 — 02 — 1942

விண்ணில்
03 — 11 — 1999

அமரர்

### ஐயாத்துரை சுப்பிரமணியம்
(சின்னராசு பத்தர்)

(உரிமையாளர், விக்னேஸ்வரா ஜுவலர்ஸ்)

ஒரு நொடியில் பிரிந்ததையா உமது உயிர்!
தனியனாய்த் தவிக்கின்றோம்
ஆடி அடங்கும் வாழ்க்கையையா
அமைதி கொண்டீரோ எமை விட்டு?
முருகனின் நாமம் கொண்ட நீர்
முருகா என அழைத்து இறை பாதம்
சென்றீரோ! ஏங்கித் தவிக்குதையா
எங்கள் உள்ளம்.
அப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் நாம்.

எமது குடும்பத் தலைவர் சிவபதமெய்திய செய்தி அறிந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி, உடனுக்குடன் பலவித உதவிகள் செய்த உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (03-12-99) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகள்.

K.K.S. வீதி, இணுவில்.

(71457)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் ஊழலை ஒழிக்க
# 100 விசேட நீதிமன்றங்கள் அமைப்பு
### ஜெனரல் முஷாரப் தகவல்

இஸ்லாமாபாத், டிசெ. 2

பாகிஸ்தானில் ஊழலை ஒழிப்பதற்காக புதிதாக 100 விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளதாக இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் தெரிவித்தார்.

பலுகிஸ்தான் மாகாணத்தில் உள்ள டார்பட் நகரில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் பேர்வழிகள் பாகிஸ்தானை ஈவிரக்கமின்றி சூறையாடிவிட்டனர். கஜானா காலியாகி விட்டது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைந்து வருகின்றது.

வங்கிகளில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாதோர், வரி ஏய்ப்பாளர்கள், ஊழல் பேர்வழிகள் ஆகியோரிடம் இருந்து அரசுக்கு வரவேண்டிய பணத்தை வசூலிக்க நாம் உறுதி பூண்டுள்ளோம். இவர்களை விசாரணை செய்வதற்கென 100 விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளன. அவற்றில் 6 முதல் 10 வரையான நீதிமன்றங்கள் இன்னும் ஓரிரு நாள்களில் அமைக்கப்பட்டு விடும்.

நீதிமன்றின் விசாரணைகளில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்படுபவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர்களிடம் இருந்து அரசுக்கு வரவேண்டிய பணம் கடுமையான முறையில் பெறப்படும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார், (இ-6-8)

## ஒரிஸா மாநில முதல்வர் பதவி விலக வேண்டும்
### கட்சி உறுப்பினர் கோரிக்கை

புதுடில்லி, டிசெ. 2

இந்தியாவின் ஒரிஸா மாநில முதல்வர் கிரிதர் குமாங் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று அவரது காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்கள் 50 பேர் கோரி உள்ளனர்.

ஒரிஸாவில் அண்மையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கான நிவாரணப் பணிகளை சரிவர செய்யாததை அடுத்தே முதல்வர் பதவி விலக வேண்டும் என்று அவரது கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

147 உறுப்பினர்களைக் கொண்ட ஒரிஸா மாநில சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சிக்கு 80 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 50 க்கும் மேற்பட்டவர்கள் புவனேஸ்வரில் கடந்த திங்கள் நடத்திய ரகசியக் கூட்டத்தை அடுத்து இந்தக் கோரிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி முதல்வர் கிரிதர் குமாங்குக்கு பதிலாக புதிய முதல்வர் ஒருவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்துள்ளதாகவும் புவனேஸ்வரில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-6-9)

## தேர்தலில் சீன சார்பு கட்சி வெற்றி

ஹொங்கொங், டிசெ. 2

பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்து 1997 இல் சீனாவிடம் மீண்டும் கையளிக்கப்பட்ட ஹொங்கொங்கில் முதல் தடவையாக மாவட்ட நிர்வாக சபைத்

உலக அரங்கில்

தேர்தல்கள் அமைதியாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி தோல்வி அடைந்துள்ளது சீன ஆதரவு பெற்ற ஜனநாயக தேசியக் கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது [இ-6-8]

## சமையல் வாயு கிடங்கில் விபத்து; 14 பேர் பலி

இஸ்லாமாபாத், டிசெ. 2

பாகிஸ்தானில் சமையல் வாயு கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். மேலும் 16 பேர் காயமடைந்தனர்.

ஹாசர்பூர் என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சமையல் வாயு 'சிலிண்டர்' ஒன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். (இ-6-8)

## பாடசாலைகளில்
# மாணவிகள் கருத்தடை மருந்து உட்கொள்ளுதல் கட்டாயம்!
### பிரான்ஸ் அரசு உத்தரவு

பாரிஸ், டிசெ.2

பிரான்ஸ் பாடசாலைகளில் கல்வி கற்கும் இளம் பெண்கள் காலையில் கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளுதல் வேண்டும் என்று பிரான்ஸ் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மிக இளம் வயதில் பெண்கள் கருத்தரிப்பதைத் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது இதற்காக கருத்தடை மாத்திரைகளை பாடசாலைகளில் வைத்து மாணவிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

அரசின் இது போன்ற உத்தரவுகள் மாணவர்களை கட்டுப்பாடற்ற நிலைக்கு கொண்டு செல்வதற்கே உதவும் என்று பெற்றோர்கள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

அதேசமயம்—

பிரான்ஸ் அரசின் இந்த முடிவுக்கு வத்திக்கான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வாறான உத்தரவுகள் பெண்களின் இள வயதுக் கர்ப்பத்தைத் தடுக்க உதவும் எனினும் எதிர்காலத்தில் சீர்கேடான சமுதாயம் ஒன்று உருவாவதற்கு இது வழிவகுக்கும் என்றும் வத்திக்கான் தெரிவித்துள்ளது (இ-6-8)

## எகிப்திய விமானம் விபத்தில்!

எகிப்து, டிசெ. 2

எகிப்திய இராணுவ விமானம் ஒன்று தீப்பிடித்து விபத்துக்கு உள்ளானதில் அதிலிருந்த விமானி ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பயிற்சிப் பறப்பில் ஈடுபட்டிருந்த சமயம் இயந்திரக் கோளாறு காரணமாக விமானம் திடீரென தீப்பிடித்து எரிந்ததாகவும்—

விமானம் பள்ளிவாசல் ஒன்றின் மீது மோதி விடாமல் இருப்பதற்காக விமானத்தை வேறு இடத்தில் தரை இறக்க முயன்றதனால் விமானி 'பரசூட்' மூலம் குதிக்க முடியாமல் போனதாகவும்— அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானியின் அருகில் இருந்த உதவியாளர் 'பரசூட்' மூலம் குதித்து உயிர்தப்பிக் கொண்டதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

அண்மையில் எகிப்திய பயணிகள் விமானம் ஒன்று 200 பேருடன் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த அனைவரும் உயிரிழந்தனர். அந்த விமான விபத்துக்கு சதி வேலை காரணமாக இருக்கலாம் எனக்கருத்துத் தெரிவிக்கப்பட்டு வரும் வேளையில் தற்போதைய விபத்து இடம்பெற்றுள்ளது. (இ-6-8)

## குவைத் பெண்களுக்கு
# வாக்குரிமை வழங்க நாடாளுமன்றம் மறுப்பு

குவைத்பெண்களுக்கு வாக்குரிமை தருவதற்காகவும் பெண்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை அனுமதிப்பதற்காகவும் குவைத் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப் பட்டுள்ளது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 30 உறுப்பினர்களும் எதிராக 32 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அரசை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகளிர் உரிமைகளை ஆதரிக்கும் ஷியாத் முஸ்லிம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குவைத்தில் ஆண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளபோதும் பெண்களுக்கு இதுவரை வாக்குரிமை அளிக்கப்படவில்லை. சவுதி அரேபியா உட்பட ஏனைய பல அரபுநாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதை அடுத்து குவைத்திலும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும். என்ற கோஷம் வலியுறுத்தப்பட்டது. எனினும் சமய அடிப்படைவாதிகள் இந்தத் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். (இ-6-8)

## ஆர்ப்பாட்டங்களை அடுத்து
# உலக வாணிப அமைப்பின் முக்கிய கூட்டம் தாமதமாகியது!

நியூயோர்க் டிசெ 2

அமெரிக்காவின் சியாற்றின் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாக இருந்த உலக வாணிப அமைப்பின் அமைச்சர்கள் நிலை 3 ஆவது மாநாடு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாகப் பிற்போடப்பட்டது.

பின்னர் இந்த மாநாடு நேற்றுப் புதன்கிழமை சியாற்றினில் தீவிர பாதுகாப்புகளுக்கு மத்தியில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். கூட்டம் நடைபெற இருந்த வாஷிங்ரன் மண்டபத்துக்குக் கூட்டப் பிரதிநிதிகள் செல்வதை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனால் மாநாட்டில் முக்கிய உரையாற்ற இருந்த பல அமைச்சர்கள் குறித்த நேரத்தில் மாநாட்டு மண்டபத்தைச் சென்றடைய முடியவில்லை. இதனை அடுத்து —குறித்த நேரத்தில் இருந்து 3 மணி நேரம் காத்திருந்த பின்னர்—மாநாடுபிற்போடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் ஆல்பிறைற் மற்றும் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி காலின் பாஷெட்ஹி ஆகியோர் இந்த மாநாட்டில் முக்கிய உரையாற்ற இருந்தனர். அவர்கள் தமது ஹோட்டலில் இருந்து மாநாடு நடைபெறும் இடத்துக்குச் செல்ல முடியாமல் ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் அலர்களது வாகனங்களைச் சூழ்ந்து கொண்டனர். ஐ. நா. செயலாளர் கோபி அனானும் மாநாட்டு மண்டபத்துக்குச் செல்வதை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினர்.

பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க முயற்சிகளை மேற்கொண்டபோதும் பலமணி நேரமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லாமல் வீதிகளில் நின்றதாகத் தெரிவிக்கப்பட்டது இதனால் மாநாட்டின் முக்கிய பேச்சாளர்கள் பலர் உரிய நேரத்தில் அங்கு போய்ச்சேரவில்லை. இதை அடுத்து மாநாடு பிற்போடப்பட்டது.

தனியார் மயமாக்குதலுக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் தாங்கி இருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு நிலவும் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தங்கி இருப்பதாகவும் [illegible] (இ-6-8)

## பங்களாதேஷில்
# அரச எதிர்ப்பு நடவடிக்கையை தீவிரமாக்க எதிர்க்கட்சிகள் முடிவு

டாக்கா, டிசெ. 2

பங்களாதேஷில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது என நான்கு எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

ஜானத்தியக் கட்சித் தலைவர் எச். எம். எர்ஷாத் ஜமேத்திக்இஸ்லாமிக் கட்சித் தலைவர் குளாம் அஸாம் இஸ்லாமிக்ஜஹாக் ஜோர்ஸர் கட்சித் தலைவர் மௌலானா அஸிஸுல்ஹக் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சித் தலைவி பேகம் காலிதா ஷியா ஆகியோர் நேற்று முன்தினம் காலிதாஷியா வீட்டில் சந்தித்து நடத்திய ஒருமணிநேர பேச்சுக்களின் பின்னர்இந்தத் தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் உடனடியாக பதவி விலகி காபந்து அரசாங்கத்தின் கீழ் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்று பேச்சுக்களின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கை ஒன்றில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் பதவி விலகும் வரை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் ஹர்த்தால் என்பவற்றை தீவிரமாக நடத்தப் போவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சிகளின் கோரிக்கை குறித்து அரசு அவர்களுடன் பேச்சு நடத்த முன்வந்தது. எனினும் அரசு இதயசுத்தியுடன் இந்தப் பேச்சுக்களுக்கு முன்வரவில்லை என்று குற்றம்சாட்டியதால் பேச்சுக்கள் நடத்தப்படவில்லை.

பிரதமர் ஷேக்ஹஹினா அரசுக்கு எதிராக நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டங்கள் ஹர்த்தால் என்பவற்றால் பங்களாதேஷின் பொருளாதாரம் மிகவும பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ 6-9]

## உலக சமய மாநாடு

ஜொகனஸ் பேர்க், டிசெ.2

இந்த ஆண்டுக்கான உலக சமயப் பேரவை மாநாடு தென்னாபிரிக்காவின் கேப்ரவுண் நகரில் நேற்று ஆரம்பமாகியது.

''அடுத்த ஆயிரமாம் ஆண்டில் உலகம் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினையைத் தீர்ப்பதில் மதத்தின் பங்கு'' என்ற பொருளில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

உலகின் பல நாடுகளில் இருந்தும் வந்துள்ள பல சமயங்களைச் சேர்ந்த மதத் தலைவர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். (இ-6-8)

## மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம்

ஜெருசலேம், டிசெ. 2

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் ஆல்பிறைற் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான அமெரிக்கத் தூதர் டெனற் றோஸ் ஆகியோர் அடுத்த வாரம் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

மத்திய கிழக்கு அமைதி முயற்சியின் இறுதி நிலைப்பாடு குறித்து ஆராய்வதற்காகவே அவர்கள் அங்கு விஜயம் செய்ய உள்ளனர். (இ-6-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சாந்தையர் மடம் பிள்ளையார் கோயிலில் கடந்த 06-11-99 அன்று எனது மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி கோயிலில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (71366)

வடிவேலு சசிகலா ஆகிய எனது விசேட அடையாள அட்டை [091303246] திருநெல்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த. வேலாயுதம், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் (71423)

### உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள CD 125 HONDA TWIN மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குட்டி, வெங்காயச்சங்க ஒழுங்கை, கோப்பாய், வடக்கு (சி/10025)

### இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71394)

### தேவை

மாணவனுக்கு வாடகைக்கு அறை தேவை. ஆனைப்பந்தி, திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கொக்குவில் பகுதிகளில் விரும்பத்தக்கது, விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 976, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (71416)

### பணிப்பெண் தேவை

அரசாங்க ஊழியரின் பிள்ளைகளை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு 50 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில்பேசித்தீர்மானிக்கலாம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 977, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (71424)

### அபூர்வ ஜோதிடம்

நவீன காண்ட ஏட்டு முறை மூலம் உங்கள்பலாபலன்களை இங்கே அறியுங்கள் அபூர்வ ஜோதிட நிலையம் UP 304, ஆலடிச்சந்தி, பலாலி வீதி, கந்தர்மடம். (71435)

## சட்டவிரோத மின் பாவனை

வலிகாமம் பகுதியில் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற மின்விநியோகம் குறித்து பொதுமக்கள் கடந்த 30 ஆம் திகதி சுன்னாகம் மின்சாரசபைக்கு சென்று முறையிட்டபோதே அங்குள்ள அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ 133)


## வெளிவந்து விட்டது!

பல்கலைக்கழக தமிழ்த் துறை மாணவர்களுக்கான சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணி மீதி மிக விரைவில்.

வெளியீடு:
அகிலன் பதிப்பகம்
திருநெல்வேலி.
[71442]


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா முருகேசு ஆச்சாரி
(கந்தசாமி)

வேலணையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முருகேசு (கந்தசாமி) ஆச்சாரியார் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் மகனும், கனகலட்சுமியின் அன்புக் கணவனும், சந்திரசேகரம் (ஜேர்மனி), ஸ்ரீதேவி ஆகியோரின் தந்தையும் பத்மநாயகி(ஜேர்மனி), நித்தியானந்தன் ஆகியோரின் மாமனும், சகானா, சரண், சாமினா, மதுரிகா, மயூரதி, வைஷ்ணவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01 - 12 - 99 இல் நீர்வேலியில் நடைபெற்றன.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நித்தியானந்தன்
(ஆனந்தன்)

குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(71434)

## திருமதி யோகாம்பிகை ஏகாம்பரம்

யாழ்ப்பாணம் இல 198(76), கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த காலம் சென்ற சுப்பிரமணியம் கந்தையா (மணியகாரன்) - செல்வநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், உடுப்பிட்டி வடக்கு காலம் சென்ற வைத்திலிங்கம் செல்லமுத்து தம்பதிகளின் மருமகளுமாகிய திருமதி யோகாம்பிகை ஏகாம்பரம் கொழும்பில் 26 - 11 - 99 அன்று காலமானார்.

அன்னார் Dr. வி. ஏகாம்பரத்தின் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி) அன்பு மனைவியும், சசிகலா, ரவீந்திரன் (ஜேர்மனி), சிறீதரன், கேதீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், எஸ். நிதிநேசன், ஆர். அனுஷா (ஜேர்மனி), எஸ். ஈஸ்வரி, கே. அன்னலீவ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், கே. தேவராஜா, திருமதி ஜி. ஞானாம்பிகை ஆகியோரின் அருமைச் சகோதரியும், எஸ். லக்ஷ்மி, எஸ். லக்ஷ்மன், எஸ். கோபிகா பிரியா, ஆர். லக்ஷ்மிப்பிரியா, ஆர். அனுஷன், ஆர். யோகலக்ஷ்மி (ஜேர்மனி), கே. விவ்ட் அஞ்சலிகா, கே. அலெக்சாண்டர் அர்ச்சுனன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், திருமதி ஷாமினி தவராஜாவின் (கனடா) அன்பு அத்தையும், பானு (கனடா), கஜன் (லண்டன்) அவர்களின் அன்புப் பெரிய மாமாவும்ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-12-99 ஞாயிறு காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Dr. V. ஏகாம்பரம்
பிள்ளைகள், மருமக்கள்.

தகவல்:
Dr. R. சுப்பிரமணியம்,
396 (570), K K S வீதி,
யாழ்ப்பாணம்.

1C, Charles Place,
Dehlwela
Tel: 727144

(71437)

## கதிரவேற்பிள்ளை கந்தையா

இல 8, சங்கிலியன் வீதியைச் சேர்ந்த கதிரவேற்பிள்ளை கந்தையா அவர்கள் (01 - 12 - 1999) புதன்கிழமை காலை காலமானார். அன்னார் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும், சித்திரா, இராஜரட்ணம் (ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), சத்தியபாலன் (கனடா), இலங்கனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், த. இராஜரட்ணம் (பணிப்பாளர் உயர் தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்), மங்களேஸ்வரி (கனடா) சோதிகலாதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நர்மதா, சுரனுதா, ஆரணி, ரிஷி, சுசாந்தன், சோபிதா ஆகியோரின் அன்புப்பேரனும், செல்லத்துரை (கண்டி), குமாரசுவாமி (கட்டுடை) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திரு. இராஜரட்ணம்
[மருமகன்]
[பணிப்பாளர் உயர் தொழில்நுட்ப நிறுவனம்
யாழ்ப்பாணம்]

இல. 8, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(71436)

## கந்தன் நவரத்தினசாமி

நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிட்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் நவரத்தினசாமி (ராசு) 22-11-1999 அன்று சுவிட்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தன் - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், இளையதம்பி - திலகம் ஆகியோரின் அன்பு மருமகனும், மற்றும் நயினாதீவு வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகிய செல்வராணியின் அன்புக் கணவரும் சிவகுமார், சுரேஸ்குமார், அசோக்குமார், ஜனனி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-12-99) வியாழக்கிழமை சுவிட்ஸர்லாந்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
(பெறாமகன்)

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

(71398)

# அலுவலகத் திறப்பு விழா

நல்லூர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா அண்மையில் சங்கத் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அலுவலகத்தைத்திறந்துவைத்தார்.

நல்லூர் உதவி பிரதேச செயலர் எஸ். வேல்முருகோன்பிள்ளை, யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் பி. சிவலோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கோழித்தீன், மாட்டுத்தீவனம், முட்டை ஆகியன இங்கு சகாய விலையில் சங்க உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. (இ-135)


## வீடு விற்பனைக்கு - கோப்பாய்

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையில் பிறிவிடுதல் செய்யப்பட்ட, 4 பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கூடியதுமான வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
Dr. சி. இராஜலிங்கம்
அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி.
(71440)

புது இடத்தில்! புதுப்பொலிவுடன்!
புது நிர்வாகத்தின் கீழ்

## நடராஜா ஆங்கிலக் கல்வி நிலையம்

சட்டநாதர் கோவிலடி, நல்லூர்.
(திவ்விய ஜீவன சங்க அருகில்)

நிலையத்தின் சகல மாணவர்களும் 02 - 12 - 99 அன்று மாலை 3-30 -க்கு வருகை தரவும்.

- நிர்வாகம்

(71443)


## கண்ணீர் அஞ்சலிகள்

எமது உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர்
திரு. இராஜரட்ணம்
அவர்களின் மாமனார்

### கதிரவேற்பிள்ளை கந்தையா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விரிவுரையாளர்கள், அலுவலர்கள்.

உயர் தொழில்நுட்ப நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(71438)

விண்ணக வாழ்வின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

02-12-1999

மலர்வு 24 — 08 — 1930



உதிர்வு 02 — 11 — 1999

அமரர் **யோசேப் அருளானந்தம்**
(யாழ். மாநகர சபை நூலகர்)

"அன்பை உருவாக்கிய இறைவனிடத்தே நான் ஜீவிதம் செய்கிறேன்"

02-11-99 இல் காலமாகிய எனது அன்புக் கணவரும் எமது பாசமிகு தந்தையுமாகிய யோசேப் அருளானந்தம் அவர்களின் அந்திமக் கிரியைகளில் கலந்து கொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் யாழ் மாநகர சபை நூலக உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய், சங்கானை, நல்லூர் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர் ஆகியோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், இளவாலை மக்கள் மற்றும் சகல உதவி புரிந்தவர்களுக்கும், தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

இல. 1, பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(சி/10054)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்திற்கான யுத்தம் என்ற அரசின் கொள்கை வேடிக்கையானது

## ஜே.வி.பி.பிரசாரச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 2

யுத்தத்தை நிறுத்துவேன்; சமாதானத்தை நிலைநாட்டுவேன் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குறுதியளித்த ஜனாதிபதி சந்திரிகா இன்று சமாதானத்திற்காகவே யுத்தம் என்ற புதியதொரு கொள்கையைப் பிரகடனப்படுத்தியிருப்பது வேடிக்கையானது. நாளாந்தம் யுத்தத்திற்கான நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருவதுடன் இராணுவத்திற்கான ஆள்பலத்தை அதிகரிக்க எல்லாமுனைகளிலும் முயன்று வருகிறார். இவரின் இந்த வேஷங்களைக் கண்டு மக்கள் மயங்கிவிடக் கூடாது.

மேல் மாகாண சபை உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாலை கொங்காவானையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;-

குறைமாதப் பிரசவம் போல்2000ஆம்ஆண்டில்நடத்தப்படவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டே நடத்த முன்வந்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா. அவருக்குப் பக்கபலமாக இருந்த முதலாளித்துவ சக்திகளின் தலைமைகள் இன்று வீழ்ந்து விட்டன.

இந்நாட்டின் சகல அரசியல் கட்சி நிறங்களையும் ஒரே தோரணத்தில் கட்டி மக்களை ஏமாற்றிக்காட்ட ஜனாதிபதித் தேர்தலை நடத்த அவர் முன்வந்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி கொடுத்ததால்தான் 1994 ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஒத்துழைத்தோம். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஏற்படுத்திய ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கு இருந்தது. அந்தப்பலம்இன்று சந்திரிகாவுக்குக் கிடையாது. ஈ பி.டி.பி. உட்பட எல்லாக் கட்சிகளும் சேர்ந்தும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியவில்லை — என்றார்.

### ம, ஐ முன்னணி வேட்பாளர்

இக்கூட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நந்தன குணதிலக பேசிய போது —

காலஞ்சென்ற சேர் பொன்.இராமநாதன்உட்பட பலர் இந்த நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க உழைத்தனர். அவர்களின் உழைப்பால் சுதந்திரம் கிடைத்த பின்னர் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முதலாளித்துவத்தில் ஊறித் திளைத்திருந்தன. இவர்களின் ஆட்சிமுறைகளில் இருந்த பிற்போக்குக் கொள்கைகளே இன்று இந்த நாட்டில் சிங்களவர்களையும் தமிழர்களையும் பிரித்துவிட்டது.

இன்று நாட்டில் நடந்து வரும் யுத்தத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் யுத்தம் பற்றிய எந்தத் தகவலையும் வெளியிட இன்று அரசு மறுத்து வருகிறது. ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டுபோட்டு விட்டது. தொண்டமானின் இறுதிச் சடங்குகளைக் கூட தேர்தல் பிரசாரமாக்கி விட்டனர் — என்றார். [ஐ-8]

நெல்லியடியில்
யாழ். BEACON
மிகவும் பிரபல்யமான அளவையியல் ஆசிரியர்
S. S. மனோகரன்
அவர்களின் வகுப்புக்கள் ஆரம்பம்
இடம், காலம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்
- நிர்வாகி
(71400)

## பின் முற்றாக்கும் தீர்வை

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மோகனராஜா பெண் துஷ்யந்தினி
பழைய றோட்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
— வழக்காளி

வழ. இல: மண விலக்கு /4D

எதிராக

ஆறுமுகம் மோகனராஜா
கேணியடி, பழைய றோட்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
— எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கு, 1999ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27 ஆம் திகதியன்று, யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஏ. ஈ. ஏகநாதன் அவர்கள் முன்பாக, வழக்காளியும் வழக்காளியின் சட்டத்தரணிகள் கனகரத்தினம் அசோசியேட்ஸ் சார்பில் சட்டத்தரணி கே. கேசவன் அவர்களின் அனுசரணையுடன், சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்த போது, எதிராளி. வழக்காளியை எதுவித தக்க நியாயமான காரணமுமின்றி விட்டுப் பிரிந்தமையால், எதிராளியை வன்மமுறை கைவிடல் குற்றத்திற்கு குற்றவாளி என மன்று கண்டு, வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1993ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10 ஆம் திகதியன்று இடம்பெற்ற விவாகப் பதிவை, மன்று இரத்துச் செய்து, வெற்றும் வெறிதுமாக்கி, இத்தால் கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

மேலும் இப் பின் முற்றாக்கும் தீர்ப்பின் பிரதி ஒன்று, எதிராளிக்குப் பதிவீடு செய்யப்பட்ட சேர்ப்பித்தல் மூலம் சேர்ப்பிக்கப்பட்ட திகதியில் இருந்தும், இப் பின் முற்றாக்கும் தீர்ப்பின் பிரதி ஒன்றை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு, குறித்த தீர்ப்பின் பிரதி பிரசுரமான திகதியிலிருந்தும் மூன்று மாதங்களின் பின்னர் இப் பின் முற்றாக்கும் தீர்ப்பு, மன்றின் முழு விதிப்பாகும் (முற்றாக்கும் தீர்வை) என மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

மேலும் இப் பின் முற்றாக்கும் தீர்ப்பு இம் மன்றின் முற்றாக்கும் தீர்வையான திகதியில் இருந்து, இவ் வழக்கின் வழக்காளி, தனது கன்னிப் பெயரான நடராஜா மகள் துஷ்யந்தினி என்ற பெயரை மீளப் பெற்று, மணமாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவிக்கலாம் என மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது

1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதி என்னால் வரையப்பட்டது.

எஸ். ஏ. ஈ. ஏகநாதன் (ஒப்பம்)
யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிபதி

கனகரத்தினம் அசோசியேட்ஸ் (ஒப்பம்)
வழக்காளியின் சட்டத்தரணி
[71413]

## சுயதொழில் முயற்சிக் கடன்

நல்லூர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடைவளர்ப்பை மேற்கொள்வதற்காக சுய தொழில் முயற்சிக்கடன் வழங்குவதற்கு நடவடிக்கைஎடுத்துவருகின்றது.

இதேவேளை ஐ நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவு இந்தச்சங்கத்தின் இரு உறுப்பினர்களுக்கு கோழிக்குஞ்சு பொரிக்கும் இரு இயந்திரங்களை வழங்கியுள்ளது.

மேற்படி சங்கத் தலைவரும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவருமான பொ. கனகசபாபதி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

(இ-135)

## மிதிவெடியில் சிக்கிய மாடு

வடமராட்சி, டிசெ 2

கைவிடப்பட்ட காவலரண் ஒன்றுக்குள் நுழைந்த மாடு ஒன்று மிதி வெடியில் சிக்குண்டு முன்னங்கால் ஒன்றை இழந்த சம்பவம் மந்திகைப் பகுதியில் இடம் பெற்றது.

[உ-7-173]

## வீதி விளக்குகள் ஒளிரவில்லை

மந்திகையிலிருந்து பருத்தித்துறை வரையிலான இரண்டுமைல் நீள வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் அண்மைக்காலமாக ஒளிரவில்லை.

முன் இரவு வேளைகளிலும் அதிகாலை வேளைகளிலும் இப்பிரதான வீதி ஊடாக போக்குவரத்துச் செய்வோர் வெளிச்சமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். (ஐ-179)

# பாடசாலை மாணவருக்கு கல்வி உபகரணங்கள்

## யுனிசெவ் அமைப்பு வழங்கும்

வலிகாமம் தெற்கு, டிசெ. 2

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு 2000 ஆம் ஆண்டில் வருடம் முழுவதும் உபயோகிக்கக் கூடியவாறான கல்வி உபகரணங்களை யுனிசெவ் அமைப்பு வழங்க உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படும்.

பாடசாலைகளில் இவ்வாறான பயனடையக் கூடிய வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் ஏற்கனவே திரட்டப் பட்டுள்ளன.

19 ஆயிரத்து 170மாணவர்களுக்கு இந்த கல்வி உபகரணங்களை வழங்கக் கூடிய முறையில் 1917 பெட்டிகளைக் கொண்ட உபகரணத் தொகுதியை மேற்படி கல்வி வலையங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகளை இணைக்கும் உத்தியோகத்தராக அண்மையில் நியமனம் பெற்ற திருமதி கோகிலா மகேந்திரனிடம் யுனிசெவ் நிறுவனம் கையளித்துள்ளது.

பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படும் இந்த உபகரணப் பெட்டிகளில் காணப்படும் கல்வி உபகரணங்களைக் குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு வருடம் முழுவதும் தேவைப்படும் போது அவர்களுக்கு வழங்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

பேனா, பென்சில், அடிமட்டங்கள், இரேசர்கள், கலர்ப் பெட்டிகள், கொப்பி வகைகள், கொம்பாஸ் போன்ற பல கல்வி உபகரணங்கள் இப் பெட்டிகளுள் அடக்கப்பட்டுள்ளன.

[இ - 152]

## கொடுப்பனவு

நவாலி, டிசெ 2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய் உதவிப்பணம், தொழுநோய், புற்றுநோய் உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[இ-100]

2000 ஆம் ஆண்டுக்குரிய வகுப்புக்கள்
MATHS CENTRE
M. M. V. Road, Nelliady.
Yr. 4, 5, 6, 7, 8
Yr. 9, 10, 11
ஆரம்பம்: 4-12-1999 சனி 3-15 p. m.
விரைவில் ஆரம்பமாகவுள்ளது
A/L பகல் நேர மீட்டல்
வினா-விடை வகுப்பு Day Class
A/L 2001- க்கான
General English
பிரிவு II ஆரம்பம் 06-12-1999 12 மணி
[71254]

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 11 — 08 — 1933



ஆண்டவன் அடியில்; 02 12 1997

அமரர் சந்தியாப்பிள்ளை திபூசியஸ்

(B Sc Dip in Ed) (B. Sc Lond

பட்டங்கள் பல பெற்று
பள்ளிகள் பல கண்டு
நாடுகள் பல வலம் வந்து
நற்கல்விதனை பலருக்கும் அளித்து
இறுதியில்
உன் நாடு திரும்பி
உன் சகோதரி நிழலிற் தங்கி
உன் வாழ்க்கை ஓடடம் தனை முடித்து
மறுமைக்குள் பிரவேசித்த
உம்மை இந்நாளில் நினைக்கின்றோம்
தேவரீருடைய காலடியில்
நித்தியத்துக்கும் களிகூர்ந்திருக்க வேண்டுகின்றோம்

சி. சிவபாதம் (ஜோர்ஜ்)
(மருமகன்)

"டொறனி வாசா"
பீச் றோட்,
பருத்தித்துறை.

(71433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 ஆம் ஆண்டுக்கான படக் கலண்டர்கள்

பின்வரும் படக் கலண்டர்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிள்ளையார் (இருவகை), முருகன், வள்ளி, தெய்வானை, அஷ்டலக்ஷ்மி, லக்ஷ்மி, ஐயப்பன், திருப்பதி வெங்கடேஸ்வரர், சரஸ்வதி, பிள்ளையார், அந்தோனியார், அன்னை வேளாங்கண்ணி, புத்தர், நபிகள் நாயகம் அத்தோடு தேவயானி, அஜித், சாலினி, சிம்ரான், கௌசல்யா, விஜய்- தேவயானி படையப்பா, பிரீதா, விஜய் (இரு வகை), சீனறிகள், சிறுகுழந்தைகள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

**சிவசக்தி புத்தகசாலை**

இல. 14, புகையிரதநிலைய வீதி, சுன்னாகம்.

ப. இ. கனகரத்தினம்
''சரஸ்பதி''
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். (71426)

# சேவை நலன் பாராட்டு



செல்வி

## மகேஸ்வரி செல்லையா

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

ஆசிரியப் பணி

**06 - 01 - 1964 - 02 - 11 - 1999**

தென்மராட்சியிலே கனி வளமும் கலை வளமும் மிகுந்து விளங்கும் மீசாலைப் பதியிலே நல்லாசானாக விளங்கிய செல்லையா – பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாக 03-12-1939 ஆம் ஆண்டு பிறந்த மகேஸ்வரி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் தரம் நான்கு தொடக்கம் சிரேஷ்ட இடைநிலைக் கல்வி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பயின்றார் தொடர்ந்து சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் LONDON ADVANCED LEVEL படித்துக்கொண்டிருக்கும்போது ஆசிரியப் பயிற்சிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 1959 — 1960 இல் யா/ திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார்.

கலையிலே ஆர்வம் மிகுந்த இவர் கல்வயலைச் சேர்ந்த சங்கீத பூஷணம் சி. விநாசித்தம்பி ஆசிரியர் அவர்களிடம் இசை பயின்று வட இலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் பரீட்சையில் சங்கீத தராதரப்பத்திரம் 5 ஆம் பகுதி வரை சித்தி பெற்றார். 1963 இல் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படும் பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியெய்தினார்.

ஆசிரியப் பயிற்சி பெற்று மூன்று ஆண்டுகளின் பின்னர் 06 – 01 – 1964 இல் ஆசிரிய நியமனம் பெற்று கண்டி கட்டுகஸ்தோட்டை அர்ச். அந்தோனியார் பெண்கள் பாடசாலையில் தனது பணியை ஆரம்பித்தார். 13 ஆண்டுகள் மலையகத்தில் மனம் நிறைந்த சேவை செய்து மாணவரை மாண்புறச் செய்த இவர் 1977 இல் யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்தார்.

அன்பும் பண்பும் அமைதியான பேச்சும் எளிமையான தோற்றமும் கொண்ட செல்வி மகேஸ்வரி ஆசிரியை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இக் கல்லூரியிலும் சேவையாற்றி 1982 இல் ஆரம்பப் பகுதித் தலைவராக நியமனம் பெற்றார். சேவைக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். 23 ஆண்டுகளாக இக் கல்லூரியிலேயே தொடர்ந்து சேவையாற்றிய இவர் 36 வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்து 03 – 12 – 99 இல் அகவை அறுபது நிறைவு பெற்று ஓய்வுபெறுகின்றார்.

இந்நாளிலே அவரது சேவையை நினைவு கூர்ந்து ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்; பிரார்த்திக்கின்றோம்!

– பழைய மாணவிகள்.

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

(சி/10041)

# வீரசிங்கம் நினைவு தினவிழா

திருநெல்வேலி, டிசெ. 2

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் வடபகுதியின் கூட்டுறவுத் தந்தை என்று போற்றப்படும் அமரர் வீ.வீரசிங்கத்தின் 35 ஆவது வருட நினைவு தினவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரிலுள்ள வீரசிங்கம் மண்டப முன்றலில் நடைபெறும்.

சபைத்தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக திருமதி கோமளா திருநாவுக்கரசுவும், கௌரவ விருந்தினராக பழம் பெரும் கூட்டுறவாளர் இ.த. குமாரசாமியும் கலந்து கொள்வார்கள்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நிகழ்த்துவார். நினைவு தினவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

(இ-135)

# புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

கொழும்பு, டிசெ. 2

நெடுங்கேணி மற்றும் கனகராயன்குளம், மாங்குளம், புளியங்குளம் ஆகிய படைத்தளங்கள் மீது நடத்திய தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் அங்கிருந்து 100 டிறக் வண்டிகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்றதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி ''யுக்திய'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது

இந்தப் படைத் தளங்களில் இருந்து சுமார் 300 வாகனங்களையும் புலிகள் கைப்பற்றியதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ சி)

# கொழும்பில் தமிழர்கள் கைது

கொழும்பு, டிசெ. 2

புறக்கோட்டை வாழைத் தோட்டம் பகுதியில் கடந்த திங்கள் இரவு படையினர் மேற்கொண்ட தேடுதலில் 34 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதே நேரம் மீரிகானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 12 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-3-6)

# வீதி சேதம்

நல்லூர், டிசெ. 2

நல்லூர் சங்கிலியன் வீதி மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. இந்த வீதியும், பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் மூடியும் உடைந்துள்ளதால் வாகனங்கள் செல்வதில் பலத்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. (இ-103)

# தமிழகத்திலிருந்து முருகன் சிலை

நெடுந்தீவு, டிசெ. 2

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயிலில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் முருகன் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கென தமிழகத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட முருகன் திருஉருவச்சிலை விரைவில் நெடுந்தீவுக்கு வந்து சேரும் என [illegible] கோயிலின் [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-11]

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## தவமணி (மாரிஸ்ரெலா) செபஸ்ரியன்

மலர்வு: 02 – 05 – 1948 உதிர்வு: 02 – 12 – 1995

சீவியத்தில் நேசித்தோரே மரணத்திலும் மறவாதீர்!

யூட் கொணறி,
எதல் கரோலின டானிசியஸ்.
எல்விஸ் கிளமன்ற்,
றெக்ஸ் கமறன்,
செபஸ்ரியன்.

215, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [71306]

# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவலைகள்!



## செல்வி ஹம்சிகா சண்முகானந்தன்

மண்ணில் படைத்தது 19 – 07 – 1992 விண்ணுக்கு அழைத்தது 02 – 12 – 1998

கண்ணெனப் போற்றி வளர்த்தோம் — ஹம்சிகாவே!
கடிதினில் பிரிந்து நீ எங்கு சென்றாய்?
பெண்ணென வளர்ந்து நீ எமக்கு — நல்ல
பெருமைதனைச் சேர்த்திடுவாய் என்றிருந்தோம்!
விண்ணுலகடைந்த விந்தைதனை — நாம்
என்னவென்று சகித்துக்கொள்வோம்?
தண்ணென்ற குளிர்ச்சி நிறைந்த பார்வையை — தினம்
எண்ணிக்கலங்குகின்றோம் நாம்!
கணக்குப் பார்க்கின்ற அந்தக் காலனின் பேரில்
ஒரு வழக்குப் போடவேண்டும்;
உன்னை எம்மிடமிருந்து பிரித்தமைக்காக!
எப்பிறப்பில் காண்போம் இனி?

ராஜா கிறீம் ஹவுஸ், நியூ ராஜா கிறீம் ஹவுஸ்
ஊழியர்கள்.

யாழ்ப்பாணம். (71397)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விரைந்து செயற்படுக!

எதிர்பார்த்தது போலவே வன்னிப் பிரதேசத்தில் பட்டினி நிலை உண்டாகியுள்ளது, அங்கு சென்று வந்த மன்னார் ஆயர் அதி. வந். இராயப்பு யோசெவ் ஆண்டகை அப்பிரதேச மக்களின் பரிதாபமான நிலையை கண்ணீர் கலங்கக் கூறி வேதனைப்பட்டுள்ளார்.

பால்மாவோ வேறு உகந்த உணவோ இன்றிக் குழந்தைகள் தாய்மாரைக் கட்டிப் பிடித்துக் கதறி அழும்காட்சிகள் கல்நெஞ்சினரையும் கரையச் செய்பவை.

ஒரு பக்கம் உணவுப் பிரச்சினை; மறுபுறம் நோய்களின் கொடுமை. மழை பெய்கிறது. போதிய தங்குமிட வசதி இல்லாததால் மக்கள் மழையில் நனைகிறார்கள். அதனால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். நோய்களைத் தீர்க்க மருந்து வசதி இல்லை.

எங்கள் உடன் பிறப்புகளும் உற்றார் உறவினர்களும் உயிரைப் பிடித்துக் கொள்ள என்ன கஷ்டப்படுகிறார்கள் என்பதனை நினைத்துப் பாருங்கள். ஒரு தடவையா, இரண்டு தடவைகளா அவர்களுக்கு இந்த அவலம்? கடந்த நான்கு வருடங்களாக விட்டு விட்டு வாழ்க்கையின் ஓரத்துக்கே செல்லும் அபாக்கிய நிலை அவர்களுக்கு.

போரும் அதற்கு வசதியாக அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையுமே வன்னியில் வாழும் தமிழ் மக்களை இவ்வாறு அடிக்கடி உயிருடன் போராட வைக்கிறது. மோதல் நடைபெறும் போதெல்லாம் உணவுப் பஞ்சமும், அது நடைபெறாத வேளைகளிலும் கூட ஏனைய அத்தியாவசிய தேவைகள் கைக்கு எட்டாத நிலையிலும் அவர்கள் தமது உயிர்களைத் தக்க வைக்க முடியாமல் இன்னற்படுகிறார்கள்; துன்பப்படுகிறார்கள்.

சமீபத்திய போர் நடவடிக்கைகளால், போக்குவரத்துப் பாதை எதுவும் புதிதாகத் திறக்கப் படாததால், வன்னியில் பட்டினி நிலைமை உருவாகும் அபாயம் உண்டு என்பதனை கடந்த 25 ஆம் திகதி இப்பத்தியில் எடுத்தியம்பினோம். அதே போல அங்கு வாழும் மக்கள் உயிருக்காகப்போராடிக் கொண்டிருப்பதை, அங்கு தாம் கண்ட கன்றாவிக்காட்சிகளை மன்னார் ஆயர் விவரித்திருக்கிறார்.

தமது சொந்த இனத்தினர்; இல்லையெனினும் மனிதநேயமுள்ள அந்நியன் கூட, இரக்கம் காட்டி உதவி வழங்கி உயிர் காக்க வேண்டிய வேளை இது. அரசாங்கம் இது விடயத்தில் தனது சொந்தத்தில் செயற்படாமல், கோரிக்கை வந்த பின்னர் காரணம் கூறக் காத்திருப்பது போல மௌனமாக இருக்கிறது.

உணவில்லாவிட்டால் மக்கள் இறக்க நேரிடும் என்பது தெரியும். போதிய உணவுப் பொருள்கள் இல்லை என்று சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் அரச அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர். எனினும் அரசாங்கம் இது விடயத்தில் அக்கறை காட்டியதாக இல்லை.

வன்னி வாழ் மக்களைச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு பாதை ஒன்று உடனடியாகத் திறக்கப்படுவது மிகமிக அவசியமும் அவசரமுமாகும். போரில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் இதனைக் கருத்திற் கொண்டு விரைவாகச் செயற்பட வேண்டும். மக்கள் நலனை முன்னிறுத்தி சாத்தியமான ஒரு பாதையைத் திறக்க வேண்டும். முன்னரைப் போல சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் துணையுடன் இந்த அவசர காரியத்தைச் செய்ய வேண்டும். இரண்டு தரப்பினர்களின் ஒத்துழைப்பும் விரைந்த செயற்பாடுமே மக்களைக் காப்பாற்றும் மனித நேயமும் மக்கள் நலனும் முன்னுரிமை பெறட்டும்.

# முழுமையாக மீளக்குடியமர மக்கள் தயக்கம் காட்டும் காரைநகர்ப் பகுதி!

ந. பாரதி
காரைநகர் செய்தியாளர்

இடப்பெயர்வுக்கு முன்னர் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்துவந்த காரைநகரில் இன்று 5 ஆயிரம் மக்களே மீளக் குடியமர்ந்துள்ளனர். இவர்களிலும் குறிப்பிட்ட சத வீதத்தினர் நகரபகுதிகளையே தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர்.

அரசாங்கமும் தொண்டர் நிறுவனங்களும் யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை முனைப்புடன் செய்து வருகின்ற போதிலும் காரைநகரில் மக்கள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகவே உள்ளன. யாழ். மாவட்டத்தில் வேறு எங்கும் இல்லாத அளவுக்குப் பாதுகாப்புக் கெடுபிடிகளும் அதிகமாக இருந்து வருகின்றன. இதனால் இங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்குத் தயங்கி வருகின்றனர்.

## அடிப்படை வசதிகள் இன்மையும் கட்டுப்பாடுகளும் காரணங்கள்

யாழ். குடாநாட்டின் மேற்குத் திசையில் உள்ள ஏழு பெருந் தீவுகளில் ஒன்றான காரைநகர் யாழ். கோட்டையில் இருந்து 13 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்தத் தீவு 4.5 மைல் நீளமும் 3.5 மைல் அகலமும் உடையது, 18 சதுர மைல் பரப்பளவுடையது.

இப்பிரதேசம் மருதநிலத்தையும், நெய்தல் நிலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. விவசாயமும், மீன்பிடியும் இந்த ஊரின் பிரதான தொழில்களாக விளங்குகின்றன.

### விவசாயம்

காரைநகர் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்யக்கூடிய அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நெற்பயிர்ச்செய்கை இடப்பெயர்வுக்குப்பின்னர் 1200 ஏக்கர் நிலப்பரப்பிலேயே மேற்கொள்ளப்படுகிறது. அதுவும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுப் பெரும்போகத்தில் மட்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதுகாப்பு வேலிகளையும் ஊடறுத்து உட்புகும் கால்நடைகளினால் பெரும் பயிரழிவு ஏற்பட்டு வருகின்றது. வயல் நிலங்களை அண்டிய குளங்கள் தூர்ந்தமையாலும், வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமையாலும் பெருமளவு மழைநீர் கடலை நோக்கிச் செல்கின்றது.

### மீன்பிடி

சிறந்த மீன்பிடித் துறைகளைக் கொண்டு விளங்கும் காரைநகர் இடம்பெயர்வுக்கு முன்னர் இந்த ஊர் மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்தது மட்டுமன்றி கொழும்பு போன்ற தென்னிலங்கைக்கும் இங்கிருந்து கடலுணவு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. நோர்வே நாட்டு அரசாங்கம் இலங்கை அரசுடன் இணைந்து சீநோர் நிறுவனத்தை காரைநகரில் நிறுவியது. இங்கு சர்வதேச தரத்திலான கண்ணாடி இழைப்படகுகள் உற்பத்தி செய்தல், கடலுணவு பதனிடுதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

வடபகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பைப் பெற்று வந்தனர். தற்போது இந்த நிறுவனம் மூடப்பட்டு உள்ளது.

கடல் வலயத் தடைச் சட்டத்தினால் பகலில் கடற்படையினரின் பாதுகாப்புடன் மட்டுமே மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதால் இங்கு பிடிக்கப்படும் கடலுணவு உள்ளூர் தேவைக்கே போதாத நிலையில் உள்ளது. பெரும்பாலான மீனவக் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

### காணி சுவீகரிப்பு

பலிகாடு, நீலங்காடுப் பகுதிகளில் கடற் படையினரின் தளவிஸ்தரிப்புக்காக 128 வீடுகள் அமைந்துள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. 1985 இல் இவற்றின் பெறுமதியில் ¼ பங்கு நஷ்டஈடாக உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் தொடர்ந்து நஷ்டஈடுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் 200 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டு 100-க்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. வேரப்பிட்டி கல்லந்தாழ்வு போன்ற இடங்களில் விமான ஷெல் தாக்குதல்களினால் 175 மீனவர்களது வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

### போக்குவரத்து

உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊர்காவற்றுறையிலும் தீவக வலயக் கல்வித் திணைக்களம் வேலணையிலும் அமைந்துள்ளதால் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் காரைநகர் துறைமுகத்தின் ஊடாகவே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இடப்பெயர்வுக்கு முன்னர் ''பாதை''ச்சேவையும் பல தனியார் படகுச் சேவைகளும் நடைபெற்று வந்த இத்துறைமுகத்தில் ஒரே ஒரு சிறு படகு மட்டும் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. அதுவும் குறிப்பிட்ட நேர ஒழுங்கில் சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுகின்றது.

காரைநகர், ஊர்காவற்றுறை இறங்குதுறை மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பயணஞ்செய்ய வரும் முதியவர்களும் பெண்களும் படகுகளில் ஏறி இறங்கும் போது பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த இரு துறைமுகங்களும் விரைவில் திருத்தியமைக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

குடாநாட்டில் இருந்து காரைநகருக்கு செல்வதற்கான போக்குவரத்திலும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். காரைநகரில் அண்மையில் பஸ்டிப்போ திறந்துவைக்கப்பட்ட போதிலும் ஆறு பஸ்கள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. பஸ்டிப்போ அமைந்துள்ள கிழக்கு வீதி ஊடாகவே பெரும்பாலான சேவைகள் நடைபெறுவதால் மேற்கு வீதியைச் சேர்ந்த மக்கள் சுமார் மூன்றுநான்கு மைல்கள் கால்நடையாகவே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. காரைநகர் சுற்று வீதி போக்குவரத்திற்குச் திறந்துவிடாமையே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

காரைநகரில் வதிவதற்கான நிரந்தர அனுமதி பெறாதவர்கள் செவ்வாய், வியாழன் சனி ஆகிய நாள்களில் மட்டும் பகல் 12 மணிக்கு முன்னர் கிராம சேவையாளரின் சிபார்சுடனேயே ஒருநாள் அல்லது இரண்டு நாள் கடற்படையினரின் ''பாஸ்'' அனுமதி [Temporary Pass] பெற்று உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். பொன்னாலைச் சந்தியில் இருந்து 150 யார் தூரத்தில் போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தப்பட்டு அனைத்துப் பொருள்களும் பொன்னாலைச் சந்தியில் வைத்து கடுமையாகப் பரிசோதிக்கப்பட்டு பின்னர் உடம்பு முழுவதும் பரிசோதனை செய்யப்பட்டு பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். வியாபாரிகள் கொண்டு வரும் 50Kg க்குமேற்பட்ட மூடைகளாயினும் பஸ்களில் இருந்து இறக்கப்பட்டு 150 யார் தூரத்திற்கு தலையில் சுமந்தவாறே எடுத்துச் செல்ல வேண்டும்.

### கல்வி

இடம்பெயர்வுக்கு முன்னர் இங்கு 14 பாடசாலைகள் இயங்கிவந்தன சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வந்தார்கள். தற்போது 6 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன 1377 மாணவர்கள மட்டும் கல்விகற்று வருகின்றனர். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் இங்குள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் 50 சத வீதமானோர் வெளியிடங்களில் இருந்தே வருகின்றனர்.

### சுகாதாரம்

இந்த ஊர் மக்களின் மருத்துவத் தேவைக்கென ஒரு வைத்தியசாலை மட்டும

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தி மடல்

## நாளை

கார்த்திகை 17
வெள்ளிக்கிழமை
திதி: ஏகாதசி
முன் இரவு 10.23 வரை.
நட்சத்திரம்: அத்தம்
முற்பகல் 11.29 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 6.15 – 7.45
ராகுகாலம்: 10.45 – 12.15
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயனாக்கு

மனிதனுடைய ஆசைக்கு [illegible] றலுக்கும் எல்லையில்லை

மார்க்ஸிம் கார்க்கி

## சாயி சிந்தனை

தீவிரமாக ஆழ்ந்து சிந்திக்கையில் இந்த உலகில், அன்புக்கு நிகரேதும் இல்லை எனத் தெளிவாகும்.

அது தானமேயாகட்டும், யாகமேயாகட்டும், தவமேயாகட்டும், சத்தியத்தை ஒட்டிப் பண்டைய கலாசாரப்படி வாழ்க்கை நடத்துவதேயாகட்டும் அதுவும் அன்புக்கு நிகராகாது.

மனிதவாழ்க்கையின் முக்கிய குறிக்கோள், ஆத்மாவைப் பற்றிய ஞானத்தை அடைவதுதான், இதுவே உண்மையான வாழ்க்கையின் இலக்கு. இந்த இலக்கை அடைந்தவுடன்தான் மனித வாழ்க்கை முழுமையாகும்.

பக்தி என்பது தூய்மையான, கலப்பற்ற, சுயநலமற்ற அன்பை இறைவன்மேல் செலுத்துவது எனப் பொருள் இவ்வுலகில அன்பைவிட மேலானதும், சிறந்ததும் வேறேதும் இல்லை. அன்புதான் சத்யம், அன்புதான் தர்மம். அன்புதான் செல்வம். இவ்வுலகம் அன்பிலிருந்து பிறந்து, அன்பினாலேயே போதிக்கப்பட்டு கடைசியில் அன்பிலேயே லயமாகிறது. ஒவ்வொரு அணுவிற்கும் கூட ஆதாரம் அன்பே!

எத்தனையோ சக்திகள் இவ்வுலகில் காணப்படுகின்றன அணுசக்தி, காந்தசக்தி, இப்படிப் பலப் பல ஆனால் அன்பின் சக்தியோ இவையனைத்தையும் கடந்து விஞ்சி நிற்கிறது. நம்பிக்கையும், அன்பும் இல்லாத வாழ்க்கைக்கு அர்த்தமில்லை பயனுமில்லை அன்பென்பதே மனித வாழ்க்கை. இவ்வுலகில் அனைத்துமே அன்புதான் அதுவே எல்லாமாக நிற்கிறது. அன்பிலிருந்தே பஞ்சபூதங்களும் பிறந்திருக்கின்றன. அன்புதான் ஒவ்வொரு தனிமனிதனிடமும் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றது.

உலகாயதமான பொருட்களின்மேல் வைக்கும் அன்பு, இச்சை, இவ்வாறு இல்லாமல் இந்த அன்பு முழுமையாக இறைவனிடம் செலுத்தப்பட்டால் அதுதான் பக்தி. அன்பு மட்டுமே இவ்வுலகம் முழுதும் சூழ்ந்து, அனைத்திலும் ஊடுருவி நிற்கிறது. அன்பின்றி எவரும் ஒரு கணமும் வாழமுடியாது. அது மனிதர்களாகட்டும், மிருகங்களாகட்டும், பறவைகளாகட்டும், புழு பூச்சிகளாகட்டும் எதுவானாலும் அன்பின்றி நிலைத்து வாழ இயலாது.

(ஆதாரம்: சனாதன சாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனப் பசளையை பயன்படுத்த உலக உணவு நிறுவனம் ஊக்குவிப்பு

## போதனைகளும், செய்முறைப் பயிற்சிகளும்

யாழ்ப்பாணம், டிசெ 2

சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை மேற்கொள்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு உலக உணவு விவசாய நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் போதனைகளும், செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு போஞ்சி, கறி மிளகாய், கோவா, கத்தரி, வெண்டி போன்றவற்றின் விதைகளும் இந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விவசாயிகளுக்கென நடத்தப்பட்டு வரும் போதனை வகுப்புக்களில் செய்முறை, பயிர் பாதுகாப்பு முறைகளைப் பற்றிய பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

சேதனப் பசளைகளை பாவிப்பதன் முக்கியத்துவம் அசேதனப் பசளையினால் சூழல் மாசடைதல் மற்றும் பாதிப்புகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

நல்லூர், புத்தூர், உடுவில், புலோலி, கரவெட்டி போன்ற பகுதிகளில் கடந்த வாரம் நடத்தப்பட்ட இந்த வகுப்புகள், பளை, வேலணை, சாவகச்சேரிப்பகுதிகளில் இந்த வாரம் நடைபெறவுள்ளன.

கிருமிநாசினிக்குப் பதிலாக வேப்பிலை, நொச்சியிலை, உள்ளிக்கரைசல் போன்றவற்றை பயிர்களுக்கு பாவிக்க முடியும் என்று இந்த வகுப்புக்களில் சிபார்சு செய்யப்பட்டு வருகிறது என்று உலக உணவு விவசாய நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதனை வகுப்புகள் முடிவடைந்த பின்னர் ஆயிரத்து 200 விவசாயிகளுக்கும் வாளி, யாழ். ரக கத்தி, மண்வெட்டி போன்ற விவசாய உபகரணங்களும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 1 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சாவகச்சேரி

(120285 ஏ). (120285பி), (120285 சி), (120846 ஏ), (120846 பி). (126181 ஏ), (126181 பி), (126181 சி), (126181 டி), (126208 ஏ), (126208 பி), (126221 ஏ), (126239 ஏ), (126239 பி), (126239 சி), (126239 டி), (126239 ஈ), (126239 எவ்), (126240 ஏ), (126240 பி), (126247 ஏ), (126250 ஏ), (126253 ஏ), (126253 பி), (126259 ஏ), (126259 பி), (126266 ஏ), (126266 பி), (126266 சி), (126269 ஏ), (126271 ஏ), (126276 ஏ), (126278 ஏ), (126278 பி), (126287 ஏ), (126287 பி), (126287 பி), (126291 சி), (126291 பி), (126305 ஏ), (126306 ஏ), (126306பி), (126308ஏ), (126310ஏ), (126310பி), (126310சி), (126310டி), (126401ஏ), (126401பி), (126411ஏ), (126412ஏ), (126430ஏ), (126441ஏ), (121017ஏ), (121017பி), (126016ஏ), (126037ஏ).

கரவெட்டி

(127266ஏ), (119145ஏ), (119145பி), (122293ஏ), (122293பி), (125551ஏ), (125756ஏ), (125762ஏ), (125879ஏ), (125940ஏ), (126005ஏ), (126009ஏ), (126009பி), (126009சி),

கோப்பாய்

(124065ஏ), (124065பி), (124065சி), (124067ஏ), (124072ஏ), (133102ஏ),

நல்லூர்

(122895ஏ), (122912ஏ), (122912பி), (122915ஏ), (122953ஏ), (122953பி), (122953சி), (122956ஏ), (122979ஏ), (122979பி), (124373ஏ), (133132ஏ),

பளை

(125486ஏ),

பருத்தித்துறை

(103014ஏ), (103014பி), (107006ஏ), (119783ஏ), (120027ஏ), (120027பி), (121923ஏ), (121923பி), (121923சி), (121923டி), (122035ஏ), (122035பி), (122108ஏ), (122108பி), (122109ஏ), (122109பி), (122173ஏ), (122173பி), (122193ஏ), (122193 பி), (122193 சி), (122193 டி), (122201 ஏ), (125535 ஏ), (125540 ஏ), (125540 பி), (125540 சி), (125561 ஏ), (125561 பி), (125561 சி), (125565 ஏ), (125629 ஏ), (125629 பி), (125629 சி), (125808 ஏ), (125809 ஏ),

உடுவில்

(123833 ஏ).

# டிசெம்பர் மாத நிவாரணம் அனுமதிப்பத்திரம் மூலம்

## உணவு முத்திரை தாமதம்

நவாலி, டிசெ. 2

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் டிசெம்பர் மாதத்துக்கான 81ஏபி புள்ளிகளுக்குரிய இலவச உலர் உணவு நிவாரணம் இம்முறை முத்திரைக்குப் பதிலாக அனுமதிப்பத்திரம் மூலம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உணவு முத்திரை யாழ். செயலகத்துக்கு வந்து சேர்வதில் காலதாமதமாகியதைத் தொடர்ந்தே அனுமதிப்பத்திர மூலம் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவு சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-100)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோருக்குப் பாராட்டு

சண்டிலிப்பாய், டிசெ. 2

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் கல்விசார் சேவைத் திட்டத்தின் கீழ் இந்த வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் விழா கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் டாக்டர் ப. உரோ மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மேற்படி பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் அதிக புள்ளிகளை பெற்ற (178 புள்ளிகள்) சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவன் செல்வன் சத்தியசீலன் செந்தில்குமாரன் விசேட விருது வழங்கப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டார். அதிக புள்ளிகள் பெற்ற ஏனைய மாணவர்களும், அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த விழாவில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சத்தியசீலன் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதன், சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கம், லயன்ஸ் கழகங்களின் பிராந்தியத் தலைவர் ஏ. தங்கேஸ்வரன் மாவட்ட தலைவர் எஸ் எஸ் தங்கராசா ஆகியோர் உட்பட்ட பலர் இந்த விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ-135)

# பரிசளிப்பு விழா

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இந்த வருடம் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழாவை இம் மாதம் 29 ஆம் திகதி நடத்துவதென தீர்மானித்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் நா. போஜன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம அதிதியாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கலந்து கொள்வார். விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-135)

★ ★ ★

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்ல வருடாந்தப் பரிசளிப்பும் கலை விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதனும், தென்மராட்சி சிறுவர் நன்னடத்தைப் பிரிவுப் பொறுப்பதிகாரி வே. கந்தசாமியும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் வே. பாலசுப்பிரமணியமும், கைதடி மேற்கு கிராம உத்தியோகத்தர் சு செல்வராசாவும் கலந்து சிறப்பிப்பர். பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-102-174)

# மக்கள் முகம்



பாசையூரைச் சேர்ந்த திரு. பஸ்ரியாம்பிள்ளை பிலிப் 15 - 11 - 1999 அன்று யாழ். பதில் நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வு பெற்ற கடற்றொழில் பரிசோதகருமாவார். இவர் முன்னாள் பாசையூர் கடற்றொழில அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், யாழ். புனித வின்சென்டிபோல் மத்திய சபையின் தலைவராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது புனித அந்தோனியார் ஆலய மேய்ப்புப்பணிச் சபையின் கௌரவ செயலாளராகவும் புனித வின்சென்டி போல் சபையின் பாசையூர் பந்தியின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் 1975 இல் கொழும்புத்திட்டத்தின் கீழ் அரசாங்கப் புலமை பரிசில் பெற்று இந்தியாவில் கடற்றொழில் கூட்டுறவு சங்கங்கள் பற்றிய விசேட பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★ ★ ★



கொழும்புத்துறை, டிசெ 2

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த பிரபல சமய சமூகசேவையாளர் உயர் சைவத்திரு சிவக்கொழுந்து - பரமானந்தம்சுவாமி அவர்கள் கடந்த 09 - 11 - 99 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலின் தர்மகர்த்தாவும், மிகச் சிறந்த மக்கள் சேவையாளருமாவார்.

யாழ். மாவட்ட வன பரிபாலனத்திணைக்களத்தில் முப்பது வருடங்கள் வரை எழுதுவினைஞராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அரச ஊழியரும் ஆவார்.

இளைப்பாறிய அரச ஊழியரான இவர் தெய்வீகப் பணியிலும், மக்கள் சேவையிலும் ஈடுபாடு கொண்டு மிகப் புனிதமாகச் செயற்பட்டு அளப்பரிய தொண்டுகள் பல செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

இவர் மக்களுடன் பழகுவதில் பெருங்குணம் படைத்த ஓர் உத்தமரும், சிறந்த செயல் வீரரும், நீண்டகால பரம்பரை சித்த ஆயுள்வேத வைத்தியரும் ஆவார். (30)

# இளைப்பாறிய, இடமாற்றம் பெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா

தனங்கிளப்பு அ. த. க. பாடசாலையில் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றும் இடமாற்றம் பெற்றும் சென்ற அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டுவிழா வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

இந்த விழாவில் இளைப்பாறிய அதிபர்கள் வ. சின்னப்பா, ந. ஏரம்பமூர்த்தி ஆகியோருக்கும் இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் வ. த. திருநாவுக்கரசு, ஆசிரியர் த. ஜெபதாஸ் ஆகியோருக்கும் பாராட்டுவிழா நடைபெற்றது.

இந்த விழாவில் ஆசிரியர் திருமதி க. சிவப்பிரகாசம் ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் பொ. நமசிவாயம், ஓய்வுபெற்ற தபாலதிபர் த. சி. குமாரசாமி உட்பட பலர்பாராட்டுரைவழங்கினர்

# முழுமையாக மீளக்குடியமர......

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கி வருகின்றது. இது ''சுற்றயல்கூறு'' வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்ட போதிலும் நீண்ட காலமாகப் பிரதம வைத்திய அதிகாரி ஒருவரும் கூட நியமிக்கப்படவில்லை

பல் வைத்தியர் இல்லாமையால் பல் மருத்துவப்பகுதி மூடப்பட்டுள்ளது. தினமும் சராசரியாக நூறுக்கும் அதிக மானோர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த ஊர் மக்களுக்கென ஒரே ஒரு பிரசவ விடுதி இந்த வைத்தியசாலையில் அமைந்துள்ளது. இதற்குரிய போதிய உபகரணங்களும் பயிற்றப்பட்ட தாதிமாரும் இல்லாமையால் இங்கு வரும் கர்ப்பவதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

### குடி தண்ணீர்

இந்த ஊர் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை குடிதண்ணீர்ப் பிரச்சினை ஆகும். இங்குள்ள கிணறுகளில் பெரும்பாலானவை உவர் நீர்க் கிணறுகளாக மாறிவருகின்றன. குழாய்நீர் விநியோகத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கிணறும் உவர்நீராக மாறியுள்ளது. இதனால் மக்கள் நன்னீர் பெறுவதற்கு நீண்ட தூரம் செல்லவேண்டி உள்ளது.

### மின்சாரம்

காரைநகர் மத்தியில் சில பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் சீராக வழங்கப்படுவதில்லை என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர் ஆலடி, வேம்படி, சிவகாமி அம்மன் கோவிலடி உட்பட்ட பிரதேசங்களில் உள்ள 200 வீடுகளுக்கே மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஏனைய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் அவர்களின் அயராத முயற்சியினால் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் 1901இல் எடுக்கப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின்படி இங்கு 8 ஆயிரத்து 850 பேர் வசித்து வந்தனர். நூறு ஆண்டுகளின் பின்னர் தற்போது 5 ஆயிரத்து 567 பேரே வசித்து வருகின்றனர்.

மேலே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டால் இங்கு பெருமளவு மக்கள் மீளக்குடியமர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசனில் தடுத்து வைக்கப்பட்ட 10 பேர் அனுராதபுரம் நீதிமன்றுக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 2
காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பத்துப் பேர் கடந்த 26 ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தம்பிராசா யோகச்சந்திரன் [வல்வெட்டித் துறை], குழந்தைவடிவேலு சேகர் [வல்வெட்டித்துறை], எஸ். மேகநாதன் [கொக்குவில்], கே. ரதீஸ்குமார் [கொக்குவில்], தி. பகீரதன் [யாழ்ப்பாணம்], எஸ். ரகுமாறன் [குடத்தனை], கு. விஜய பாஸ்கரன் [தொண்டமனாறு], கே. உதயசூரியன் [கொக்குவில்], நா. தமிழ்நேசன் [கொக்குவில்], பூ. வசந்தராஜா [உடுப்பிட்டி] ஆகியோரே அனுராதபுரம் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களாவர்.

அனுராதபுரம் நீதிமன்றத்தால் இவர்கள் காலவரையறையற்ற விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் கைது செய்யப்படுபவர்களை யாழ். நீதிமன்றங்களிலேயே ஆஜர் செய்யலாம் எனப் பிரதம நீதியரசர் சட்டமா அதிபருக்குப் பணித்திருப்பதாக பருத்தித்துறை—மல்லாகம் நீதிவான் ஆர். ரி. விக்கினராஜாவுக்கு அறிவித்திருந்தார்.

அதன் பின்னரே காங்கேசன்துறை தடுப்பு முகாமில் இருந்து இவர்கள் அனுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-5-9)

## ஆசிவழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 2
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலிருந்து ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9-00 மணிக்குக் கல்லூரி அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பல சமயப் பெரியார்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் பங்கு பற்றுவர். (உ-3)

# பசுப்பாலில் தண்ணீர்: விற்பனையாளர் சிக்கினர்

வலி. கிழக்கு, டிசெ. 2
விற்பனை செய்யும் பசுப்பாலில் பெருமளவு தண்ணீர் கலப்படம் செய்துள்ளமை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டுப் பாலும் நிலத்தில் ஊற்றப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் [கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்றது.

பசுப் பாலை வீடு வீடாகச் சைக்கிளில் கொண்டு சென்று விற்பனை செய்யும் பால் விற்பனையாளர்களை மறித்து கொக்குவில் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவபாலன் பாலில் கலப்படப் பரிசோதனை நடத்தினார்.

இதன்போது அவர்களில் மூவருடைய 113 லீற்றர் பாலில் ஒரு லீற்றர் பாலுக்கு ஒன்றரை லீற்றர் தண்ணீர் வீதம் கலப்படம் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, பால் முற்றும் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

இதேவேளை ஏனையவர்களின் பாலில் குறைந்தளவு கலப்படம் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் அனைவரும் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (உ-180)

## வல்லைப்பாலம் சேதமுற்ற நிலையில்

நெல்லியடி, டிசெ. 2
வடமராட்சிக்கான முக்கிய கேந்திரப் பாதையாக விளங்கும் வல்லைப்பாலம் சேதமடைந்து உருக்குலைந்த நிலையில் உள்ளது

தற்பொழுது தொடர்ச்சியாக மழை பெய்துவருவதனால் வல்லைக்கடலின் நீர் மட்டமும் அதிகரித்துவருகின்றது

இந்த நிலையில் இப்பாதை ஊடாகப் பயணம்செய்வோர் பெரிதும் அச்சமடைகின்றார்கள். (உ-109)

## 'ராகிங்' சம்பவம்:

# கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 2
"வன்னியில் பகிடிவதை சம்பந்தமாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட மாணவர்கள் —

யாழ். கைலாசபதி அரங்கில் முதலாம் வருட மாணவன் ஒருவன் குடையால் தாக்கப்பட்டு பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துடன் எமக்குத் தெரிந்தவரை தொடர்புபடவில்லை.

— இவ்வாறு தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் விடுத்திருக்கின்றது.

மேற்படி பகிடிவதைச் சம்பவம் தொடர்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனின் முன் பக்கத்தில் பிரசுரமான செய்தி குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே ஒன்றியம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்தப் பகிடிவதைச் சம்பவம் தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகம் விசாரணை நடத்தி வருவதாகவும் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது. (உ)


## வெற்றி வீரர்கள் பாராட்டப்படுகின்றார்கள்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் கல்லூரியின் மூன்று உதைபந்தாட்டக் குழுவினரும் அவர்கள் இவ்வருடம் பெற்ற சம்பியன் வெற்றிக்காக இன்று (02-12-99) தேநீர் விருந்துபசாரம் நடத்திக் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுநர், பழைய மாணவர் சங்க நிர்வாகசபை அங்கத்தவர்கள், யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணியில் பங்கேற்ற இக்கல்லூரியின் நான்கு பழைய மாணவர்கள் ஆகியோரும் கலந்து வெற்றி வீரர்களை வாழ்த்திக் கௌரவிப்பார்கள்.

க. பஞ்சலிங்கம்
கௌரவ செயலாளர், ப.மா. சங்கம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(71460)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை இராசம்மா
(சங்கானை)

சங்கானை கிழக்கு கூடத்து அம்மன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை இராசம்மா 01 - 12 - 99 இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரராசசேகரம் மற்றும் விஜயலட்சுமி, தனலட்சுமி, சந்தானலட்சுமி, ஞானபண்டிதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனபாலசிங்கம், தில்லைநாயகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவில் உள்ள சிவரூபன், சிவகணன், சிவநிதி, சிவானி மற்றும் பிரணவதாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-12-99) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
செ. விஜயலட்சுமி
(மகள்)

'வைகுந்த வாசம்',
கூடத்து அம்மன் கோயிலடி,
சங்கானை.

(சி/10059)

# வன்னிக்கு உணவுப் பொருள்களை அனுப்பக் கோருகின்றது கூட்டணி

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்

கொழும்பு, டிசெ. 2
வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு உணவு, மருந்து, மண்ணெண்ணெய் ஆகியவற்றை உடன் அனுப்பஏற்பாடு செய்யவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு குறித்து கடந்த 22 ஆம் திகதி தங்களைச் சந்தித்த சமயம் தெரிவித்திருந்தோம்.

இது விடயமாகத் தங்கள் செயலாளர், வடக்கு-கிழக்கு ஆளுநர் ஆகியோருடன் நேற்றுத் தொடர்பு கொண்டேன்.

பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்று ஆளுநர் தெரிவித்தார். இந்தப் பொருள்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் செய்ய முடியும்:

இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அங்கு அனுப்ப ஏற்பாடுசெய்ய வேண்டுகிறோம் — என்றுள்ளது. (உ-3)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 2
அருட்தந்தை நீ. மரியசேவியர் அடிகளாரின் 37 வருட குருத்துவ வாழ்வையும் திருமறைக் கலாமன்றத்தில் அவர் ஆற்றிய 35 வருட காலத் தொண்டினையும் அவரது அறுபதாது அகவை நிறைவையும் கௌரவித்து நாளை விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளைகாலை 9.30 மணிக்கு மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் திருப்பலி வழிபாடும் தேநீர் விருந்தும் பிற்பகல் நன்றி பாராட்டும் விழாவும் இடம்பெறவுள்ளன. (உ-3-4)

## கோப்பாயில் கிளைமோர் மீட்பு

கோப்பாய், டிசெ. 2
கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள காலலரண் பகுதியில் இருந்து நேற்று கிளைமோர் குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

வீதித் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்த படையினர் யாழ். இராச வீதி - பழம் சந்தியில் பொலீஸ் காவலரணுக்கு அருகில் - நேரம் கணித்து நிலத்தில் வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-7-72-180)

## திருத்தப்படாத வீதி குறித்து முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 2
அராலி அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள கிளுவான வீதி கற்கள் பறிக்கப்பட்ட நிலையிலும் கடந்த 6 மாத காலமாக திருத்தப்படாமல் உள்ளது.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனை அடுத்து பிரதேச சபைத் தலைவர் வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளரின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு வந்துள்ளார். (இ-6)

## வலி. தெற்கில் மீளக்குடியமர்வு கொடுப்பனவு

புன்னாலைக்கட்டுவன், டிசெ. 2
வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஜே—207 பிரிவில் மேலும் 40 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப் பிரிவில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் எஞ்சிய 82 குடும்பங்களுக்கும் கொடுப்பனவு வழங்குவதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-133)

## மீன்பிடிப்பதற்கு தொடர்ந்து தடை

வடமராட்சி, டிசெ. 2
வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை முதல் தொண்டமானாறு வரையான கடற் பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்கு கடந்த 17ஆம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இது விடயமாக உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் பலன் கிடைக்கவில்லை என்றும் சமாசப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். ([illegible])

## மிருசுவில் பகுதியில்

# காணாமற் போன இளைஞர் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில்!

யாழ்ப்பாணம், டிசெ. 2
மிருசுவில் பகுதியில் கடந்த மாதம் 17 ஆம் திகதி காணாமல் போன யோகரத்தினம் புவிகரன் (வயது 18) என்பவர் தற்பொழுது ஈ. பி. டி. பி. சாவகச்சேரி அலுவலகத்திலிருப்பதாக அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

தமது குடும்பத்தில் மூத்த மகனாக இருக்கும் இவரை ஈ.பி.டி.பி. யிலிருந்து மீட்டுத் தருமாறும் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த 27 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எட்வேர்ட் வசந்தரூபன் என்பவர் 513 ஆவது பிரிகேட்டினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கபபட்டுள்ளது. (உ-5-9

## நகைக் கடை ஊழியர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையொன்றில் வைத்து நகைக்கடை ஊழியர் ஒருவர் நேற்று படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். என மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

யாழ், கஸ்தூரியார் ஒழுங்கையில் வசிக்கும் சந்திரசேகரம் பிரபாகரன் (வயது 22) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். (உ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் பரவலாக மழை, வெள்ளப் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2

கடந்த சிலநாள்களாகப் பெய்து வரும் பெரும் மழை காரணமாக குடாநாட்டில் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் காரணமாக சுகாதாரப் பிரச்சினைகளும் போக்குவரத்தில் இடர்களும் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலை ஆகிய பகுதிகளில் பெருமளவு நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. தொடர்ந்து பெய்து வரும் பெரும் மழை காரணமாக விவசாயிகள் பெரும் அழிவை எதிர் நோக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. (உ4-13-9)

## வாக்காளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கேசன்துறை மற்றும் கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பளைப் பிரதேசத்துக்குமான வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யும் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பமாகின.

மானிப்பாய், கோப்பாய் மற்றும் உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிகளுக்குமான வாக்காளர் அட்டைகள் இன்றைய தினமும் —

சாவகச்சேரி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் தொகுதிகளுக்கான வாக்காளர் அட்டைகள் நாளையும் —

விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

களைக் கேட்டுக்கொள்ளவில்லை எனவும் —

அரசாங்கம்தான் பேச்சுக்கு முன்முயற்சி எடுத்தது மற்றும் அவற்றை பரம இரகசியமாக நடத்த விரும்பியது என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளது முற்றிலும் பிழையானது எனவும்—

அரசு அறிவித்துள்ளது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் இடம்பெறாத வகையில் இந்தத் தேர்தலை நடத்துவதற்குப் பொலீஸார் தயாராகவிருக்கின்றனர் என்றும் —

அரசியல் கட்சிகள் அதற்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்றும் —

பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (உ-3)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர் வே. பிரபாகரன் மாவீரர்தின உரையின் பின்னர் மக்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராகவே வாக்களிப்பது என்ற நிலையில் இருப்பதாக பரவலாகப் பேச்சடிபடுகின்றது என்று யாழ். வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தநிறுவனம் மேலும் தெரிவித்தது (உ-3)

# ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 2

புலோலி றோ. கத்தோலிக்கப் பாடசாலை ஒளிவிழா இன்று பாடசாலை அதிபர் சோ. அரியலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி மு.ஸ்ரீபதி பிரதம விருந்தினராகவும் வண. யோசப் அடிகள், வண யேசுரத்தினம் அடிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர். (3)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த பஸ்களில் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — முருங்கன் பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் மீது நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களை அடுத்து அந்தக் கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)



மடுத் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பங்குபற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பகுதியினரை மேற் படத்திலும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளைக் கீழ் உள்ள படத்திலும் கறுப்புப் பட்டிகளுடன் காணலாம்.

## வடக்கு-கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

கறுப்புப்பட்டிகளை அணிந்து விரிவுரைகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

இந்தப்போராட்டம் பூரண வெற்றியைத் தந்துள்ளது எனவும்—

அதில் கலந்துகொண்ட அனைவருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது எனவும்

அந்தச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இதேசமயம் பலாலி ஆசிரிய கலாசாலையில் நேற்று நடைபெற்ற ஒளிவிழா நிகழ்ச்சியின் போது 'ஒளி' என்ற கத்தோலிக்க சஞ்சிகை, ''மருதமடு அன்னையின் மலர்ப் பாதங்களில் மரணத்தை அரவணைத்த மக்களுக்குக் காணிக்கை'' என்ற சமர்ப்பணத்தோடு வெளியிட்டு வைக்கப்பட்டது.

## இயல்பு நிலை...

(முதலாம்பக்கத் தொடர்)

கட்சி மட்டும் தான் புலிகளுடன் பேச விரும்புவதாகக் காட்டி, ஐ. தே. கட்சிக்கு எதிராக இனவாத உணர்வையும் ஊட்டி வருகின்றார்.

புலிகளுடன் தாம் என்ன பேசினார், பேச்சு நடத்தும் சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்ற விவரங்களை எல்லாம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு முன்வைக்க வேண்டும். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் தெரியாமல் இரகசியமாகப் பேச்சு நடத்த ஜனாதிபதி முயற்சித்தது தவறாகும்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண்பதையே தாங்கள் விரும்புவதாக புலிகளின் தலைவர் அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். அனைவரும் அதையே விரும்புகின்றனர்.

புலிகளுடன் பேசித்தான் தீர்வு காண முடியும். அத்தகைய பேச்சு ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் வடக்கு—கிழக்கில் இயல்புநிலை ஏற்படுத்துவது குறித்து முதலில் பேசவேண்டும். வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது அங்கு இயல்புநிலை பிறக்க வழி வகுக்கும் என்றால் அது குறித்துப் பேசுவதை நான் வரவேற்கின்றேன்.

பேச்சு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை நாடலாம். அத்தகைய மத்தியஸ்தம் வேண்டும் என்பதை நான் முற்று முழுதாக ஏற்கின்றேன்.

ஆனால் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தரா, ஏற்பாட்டாளரா, உதவியாளரா அல்லது அனுசரணையாளரா தேவை என்பது தொடர்பான 'சொற்போரில்' நான் இறங்க விரும்பவில்லை.

என்றாலும் இரு தரப்பையும் மேசைக்குக் கொண்டு வர நடுநிலையாளர் ஒருவர் தேவை என்பதை நான் உணர்கிறேன்.

ஆனால், அவர் ஒரு தரகராக (Broker ஆக) இருக்க முடியாது. அவர் பொறுப்பு நிற்கவோ, ஒரு தரப்புக்காக மற்றைய தரப்புக்கு உறுதி நிற்பவராகவோ இருக்க முடியாது— என்றார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எதிராகக் — காட்டமாக — பல குற்றச்சாட்டுக்களை இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் முன்வைத்தார். [உ-3]


## கருத்தரங்கு

### இலங்கைச் சப்ரகமுவ பல்கலைக்கழகம்

காலம்: 4 - 12 1999 சனிக்கிழமை காலை 10 மணி (புதிய)

இடம்: நூலக கேட்போர் கூடம் யாழ். பல்கலைக்கழகம்

விடயம்: பல்கலைக்கழக கற்கைநெறி சம்பந்தமான விளக்கங்களும் புதிய மாணவர்களுக்கான விளக்கங்களும் வழங்கப்படும்

பயன்மிகு இக்கலந்துரையாடலுக்கு 1999 / 2000, 2000 / 2001 ஆகிய கல்வி ஆண்டுகளில் எமது பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் மற்றும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சிரேஷ்ட மாணவர்கள்
இலங்கைச் சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

அனுசரணை: கலைப்பீட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.

(சி/10055)



SRI LANKA
COMPUTER
DRIVING
LICENCE

அரசாங்க உத்தரவாதம் பெற்ற மேற்படி கணனிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் எமது நிறுவனத்தில் DIPLOMA in MS - OFFICE பயின்ற பழைய மாணவர்கள், தற்போது கல்வி பயின்று வரும் மாணவர்கள், எதிர்வரும் கல்வி ஆண்டில் எம்முடன் இணையவிருக்கும் மாணவர்கள் அனைவரும் விவரங்களை 05-12-99 ஞாயிற்றுக்கிழமை உதயனில் பார்வையிடலாம்.

DIRECTOR,
IIS,
100, Clock Tower Rd,
Jaffna.

(சி/10058)



உ

ஸ்ரீ ராம ஜெயம்

## பூப்புனித நீராட்டு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 17 ஆம் நாள் (03 - 12 - 1999) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரம் கூடிய காலை 6.15 மணி முதல் 7.45 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருநிறைசெல்வி
**சிவாஜினி**
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டி ருது சாந்தி செய்ய இறைவன் திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி மனோகரன் மல்லிகாதேவி தம்பதிகள்

மல்லிகா ஸ்ரோர்ஸ்
சந்தை முன்பாக
மானிப்பாய்.
T. P. 021 - 2887

மல்லிகாபதி
ஆஸ்பத்திரி முன்பாக
மானிப்பாய்.
T. P. 021 - 2887

[சி/10042]



தமிழ் - ஆங்கில
தட்டச்சு,
சுருக்கெழுத்து
**வகுப்புக்கள்**

மேற்படி பயிற்சி நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

**05 - 12 - 99**

ஞாயிறு பகல் 10 மணி.

★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்களுக்கு MS - WORD இல் மேலதிகமாகக் கணனிப் பயிற்சி அளிக்கப்படும்.

இயக்குநர்,
IIS,
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10056)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org